


மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் (DTCP) சேலம மாவட்டம்.
சேலம் உள்ளூர் திட்ட குழுமப் பகுதி
ஓமலூர் பேரூராட்சி

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் பேரூராட்சி மற்றும் கோட்டமேட்டுப்பட்டி கிராமம், சர்வே எண்கள்: 44/15 - ஆகியவற்றில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில் நுட்ப ஒப்பதல் வரைபடம். (திட்ட பகுதி)

வ

அளவு : 1:400 (அ) 1"=33'0"

கோப்பு எண் : SLM /S4Y4LJKM/60228/ 2026 / TCP

இணையதள விண்ணப்ப எண் : S4Y4LJKM

குறிப்பு:

1. மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு : 0.48½ ஏக்கர் (அ) 1963.00 ச.மீ
2. மனைப்பிரிவின் எல்லை .....
3. உத்தேச சாலை .....
4. நிலையிலுள்ள சாலை .....
5. தொலைதொடர்பு பயன்பாடு .....
6. கோரிய மனைகள் : 12
7. ஒதுக்கிய மனைகள் : 12

பொது ஒதுக்கீடுகள்:

7. உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை (ஆவண எண்:695/2026)

(a) உத்தேச சாலைகளின் பரப்பளவு } = 552.29 ச.மீ

நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்:4367/2019/BA2, நாள் 05.02.2020-ன்படி பூங்கா ஒதுக்கீடு 10% பரப்பளவு இடத்திற்கு ஈடான அரசு வழிகாட்டி மதிப்பின்படி தொகையை அரசு கணக்கு தலைப்பில் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

பொது உபயோகம்

TNCD & BR 2019, 47(8) - ன் படி தானமாக ஒப்படைக்கப்பட்டவை

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட பொது உபயோக மனை பரப்பு

உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட வேண்டிய (PP1) மனைப்பரப்பு (ஆவண எண்:695/2026) - 9.30 ச.மீ (0.66%)

(TANGEDCO)-க்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட பொது உபயோக மனை பரப்பு

TANGEDCO -விற்கு ஒப்படைக்கப்பட்ட (PP2) மனைப்பரப்பு (ஆவண எண்:696/2026) - 9.30 ச.மீ (0.66%)

மூலை முடக்கு : 12.0 மீ அகல சாலை வரை 1.50மீX1.50மீ.

நிபந்தனைகள்

1. அரசாணை எண் 18, நகராட்சி நிர்வாகம் (மு) குடிநீர் வழங்கல் துறை (MA1) நாள் 04.02.2019-ன்படி உள்ள நிபந்தனைகளை கடைப்பிடிக்க வேண்டும்.
2. அரசாணை எண் 16, நகராட்சி நிர்வாகம் (மு) குடிநீர் வழங்கல் துறை (MA1) நாள் 31.01.2020-ன்படி உள்ள நிபந்தனைகளை கடைப்பிடிக்க வேண்டும்.
3. அரசாணை எண். 181, வீட்டு வசதி (மு) நகர்புற வளர்ச்சி ந.வ.4(1) துறை நாள். 09.12.2020-ன்படி நிபந்தனைகளை கடைப்பிடிக்க வேண்டும்.
4. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்படியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும், உள்ளாட்சி தலைவர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
5. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டாலோ மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் ரத்து செய்யப்படும்.
6. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
7. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்புவமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம் - குத்தகை பத்திரம் - பட்டா- தானப்பத்திரம் -பொது அதிகார பத்திரம் மேலும் பல விண்ணப்பதார் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
8. நிராகரிக்கப்படாத வண்ணம் கட்டிடம் கட்டப்பட வேண்டும்.
9. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயில் 60cm X 120cm அளவிலான நிராந்தர தகவல்பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
10. நீதிமன்ற வழக்கு ஏதேனும் நிலுவையில் இருப்பின் இத்துறையின் மனைப்பிரிவு அனுமதி செல்லத்தக்கது அல்ல.
11. இம்மனைப்பிரிவிலிருந்து அருகிலுள்ள இடத்திற்கு செல்லும் வரைபடத்தில் காண்பிக்கபட்டுள்ளவாறு மனைப்பிரிவு சாலைகளின் குறுக்கே சாலையின் போக்கினை பாதிக்கும் வகையில் சுற்றுச்சுவர் கட்டப்பட்டிருப்பின் அகற்றப்படல் வேண்டும்.
12. உத்தேச மனைப்பிரிவு சாலைகளுக்கு மனுதாரரால் தார் சாலை அமைக்கப்பட்டு ஆணையாளர் அவர்களிடம் தரம் குறித்து தகுதிச்சான்று பெறப்பட்ட பின்னர் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
13. அரசாணை 155-ன் வீட்டுவசதி (மு) நகர்புற வளர்ச்சித்துறை நாள்:08.10.2025-ன் படி தொலைதொடர்பு கம்பிகளுக்கு இடமளிக்கும் வகையில் குறைந்தபட்சம் 0.15மீ விட்டம் கொண்ட வெற்று குழாய்கள் (பெரிய அளவிலான HUME குழாய்கள் /HDPE குழாய்கள்) மனைப்பிரிவு சாலைகளின் வெளிப்புற விளிம்புகளில் அமைக்கப்பட வேண்டும்.

PLANNING PERMISSION NO: 46/2026
APPROVAL NO: SWP/DTCP/SALEM/LAYOUT NO.78 /2026

உதவி இயக்குநர்/உறுப்பினர் செயலர் (பொ)
சேலம் உள்ளூர் திட்ட குழுமம்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
சேலம் மாவட்டம்

ரா.கீதா
வரைவாளர் நிலை-II

ப.புனிதவதி
மேற்பார்வையாளர்

Signature Not Verified
Signed by Assistant Director
Location:Salem
Date:2026.03.18 17:23:57

Signature Not Verified
Signed by Executive Officer
Location:Salem
Date:2026.06.03 15:53:16